சுருக்கம்

சமூக நீதித்துறை – 2026 – 2027 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களின் அறிவிப்பு - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையில் உள்ள வேறுபாட்டை களையும் நோக்கில் "பழங்குடியினருக்கான சிறப்பு கல்வி உதவித் தொகை திட்டம்" அறிமுகப்படுத்துதல் – நிருவாக அனுமதி மற்றும் கூடுதல் நிதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது

சமூக நீதி(ஆதிந-3)த் துறை

அரசாணை (நிலை) எண். 77

நாள் : 16.10.2026
பராபவ வருடம்,
புரட்டாசி மாதம் 29-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2057,

படிக்கப்பட்டது.

2026-2027-ஆம் ஆண்டிற்கான சமூக நீதித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்கள் அறிவிப்பு எண்.16

ஆணை:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளி மற்றும் கல்லூரி அளவிலான (Pre-Matric and Post-Matric) கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் ஒன்றிய அரசின் வழிகாட்டு நெறிமுறையின்படி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், இவ்விரு பிரிவினருக்கும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையில் ஆதிதிராவிடர் மாணாக்கர்களுடன் ஒப்பிடுகையில், பழங்குடியின மாணாக்கர்களுக்கு குறைவான கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது, இதனால் ஒரே பள்ளி அல்லது கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகிறது.

2. இவ்வேற்றத்தாழ்வுகளை களையும் நோக்கில், 2026-2027-ஆம் ஆண்டிற்கான சமூக நீதித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்கள் அறிவிப்பு எண்.16-இல் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"பழங்குடியினருக்கான சிறப்பு கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையில் உள்ள வேறுபாட்டை களைந்து, சமமாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த கூடுதல் செலவினத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும்.

இதன் மூலம், பழங்குடியின மாணாக்கரின் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்கல்வி மற்றும் தொழில்முறைப் படிப்புகளில் அவர்களின் பங்கேற்பை அதிகரித்து, உயர்கல்விக்கான சம வாய்ப்பு உறுதி செய்யப்படும்."

3. மேற்படி, "**பழங்குடியினருக்கான சிறப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தினை**" செயல்படுத்தும் விதமாக பழங்குடியின மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை ஆதிதிராவிட மாணாக்கருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கி அதற்கு தேவைப்படும் கூடுதல் நிதி மாநில அரசின் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

4. பழங்குடியின மாணாக்கருக்கான கல்வி உதவித் தொகை வேறுபாட்டினை சரி செய்து, ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு இணையாக வழங்குவதற்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை பராமரிப்புப் படியாக ரூ.2,54,54,700/-, மருத்துவ கல்விக் கட்டணமாக ரூ.55,20,000/- மற்றும் ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகை பராமரிப்புப் படியாக ரூ.1,22,08,500/- ஆக மொத்தம் ரூ.4,31,83,200/- (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்) கீழ்கண்டவாறு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்படுகிறது.

அ) போஸ்ட் மெட்ரிக் (Post-Matric) கல்வி உதவித் தொகை (பராமரிப்பு படி)

தொகுதி	ஆதிதிராவிட மாணாக்கர் (வருடத்திற்கு) (ரூபாயில்)		பழங்குடியின மாணாக்கர் (வருடத்திற்கு) (ரூபாயில்)		வித்தியாசத் தொகை (ரூபாயில்)	
	விடுதியில் தங்கிப் பயில்வோர்	விடுதியில் தங்காதோர்	விடுதியில் தங்கிப் பயில்வோர்	விடுதியில் தங்காதோர்	விடுதியில் தங்கிப் பயில்வோர்	விடுதியில் தங்காதோர்
Group-1	13500	7000	12000	5500	1500	1500
Group-2	9500	6500	8200	5300	1300	1200
Group-3	6000	3000	5700	3000	300	0
Group-4	4000	2500	3800	2300	200	200

மேற்படி அட்டவணையின்படி, 2025-26 ஆம் கல்வியாண்டின் இணையதள விண்ணப்பத் தரவுகளின் அடிப்படையில், மொத்தம் 35078 பழங்குடியின மாணாக்கருக்கான கல்வி உதவித்தொகை வேறுபாட்டைக் களைய ரூ.2,54,54,700/- (விடுதியில் தங்கிப் பயில்வோர் – ரூ.91,62,400/- + விடுதியில் தங்காதோர் ரூ.1,62,92,300/-) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யபடுகிறது.

ஆ) மருத்துவம் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கான கல்வி உதவித் தொகை:

ஒன்றிய அரசின் பழங்குடியின அமைச்சக வழிகாட்டு நெறிமுறையின்படி, கல்விக்கட்டண உச்சவரம்பாக ஆண்டுக்கு ரூ.6.00 இலட்சம் மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் தற்போது பாதிக்கப்பட்ட 3 மாணாக்கர்கள் (அதாவது S.கோகிலா, S. நேத்ரா, மற்றும் G. புனித்), ஆகியோர்களுக்கு தமிழக அரசின் கட்டண நிர்ணயக் குழுவின் செயல்முறை ஆணையின்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள நிர்வாக ஒதுக்கீட்டுக் கட்டணத்திற்கு ஒன்றிய அரசு வழங்கும் ரூ.6.00 இலட்சம் போக, மீதமுள்ள கூடுதல் கட்டணத்தை மாநில அரசு நிதியிலிருந்து வழங்க முடிவு செய்து ரூ.55,20,000/- கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(இ) ப்ரி மெட்ரிக் (Pre-Matric) கல்வி உதவித் தொகை (பராமரிப்பு படி)

ஆதிதிராவிட மாணாக்கர்கள் (வருடத்திற்கு) (ரூபாயில்)		பழங்குடியின மாணாக்கர்கள் (வருடத்திற்கு) (ரூபாயில்)		வித்தியாசத் தொகை (ரூபாயில்)	
விடுதியில் தங்கிப் பயில்வோர்	விடுதியில் தங்காதோர்	விடுதியில் தங்கிப் பயில்வோர்	விடுதியில் தங்காதோர்	விடுதியில் தங்கிப் பயில்வோர்	விடுதியில் தங்காதோர்
7000	3500	6250	3000	750	500

2025-26 ஆம் கல்வியாண்டின் இணையதள விண்ணப்பத் தரவுகளின் அடிப்படையில், விடுதியில் தங்காத 24417 பழங்குடியின மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை வேறுபாட்டைக் களைய ரூ.1,22,08,500/- கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யபடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

கணக்குத் தலைப்பு விவரம்	தொகை (ரூபாயில்)
2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன்- 277 கல்வி – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்- UB பழங்குடியினர் மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு கல்வி உதவித் தொகை - மாநில அரசின் பங்கு – 312 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் - 02 மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு IFHRMS DPC 2225 02 277 UB 31202	ரூ 3,09,74,700/-
2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UD பழங்குடியினர் மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு கல்வி உதவித் தொகை - மாநில அரசின் பங்கு - 312 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 01 மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு IFHRMS DPC : 2225 02 277 UD 31201	ரூ 1,22,08,500/-
மொத்தம்	ரூ. 4,31,83,200/-

(ரூபாய், நான்கு கோடியே முப்பத்தொரு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூறு மட்டும்)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ4,31,83,200/- ஐ 2026-2027-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2026-2027-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு

/ இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பும் போது தவறாமல் சேர்த்து அரசின் நிதித் (பி,மிபி(ம)சிந/வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை, நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2981/நிதி(பி,மிபி(ம)சிந)த் துறை/2026, நாள். 15.10.2026-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 2026100667.

(ஆளுநரின் ஆணைப்படி)

டாக்டர். என். சுப்பையன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாநில கணக்காயர், சென்னை- 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை -600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

நகல்

மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
செயலாளர், சமூக நீதித்துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை - 600 009.
நிதி(பி,மிபி(ம)சிந /வ.செ.பொ-I)த் துறை, சென்னை - 600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16/10/2026

பிரிவு அலுவலர்

16/10/2026